நாள்: 09.07.2026

OP 232/2023 JTW 268/2023

பெயர் சரண்யா

ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை என்னுடைய குடும்பத்திற்குரியது தான். அதில் நான் தான் குடும்ப தலைவர் என காட்டப்பட்டுள்ளது. என் கணவரை குடும்பஅட்டையில் குடும்ப உறுப்பினராக தான் காட்டப்பட்டுள்ளது. அது **என்னிடம் காட்டப்படும் குடும்ப அட்டை ஒளிநகல் எ.ம.சா.ஆ.1** ஆகும். குடும்ப அட்டையில் என்னுடைய செல்போன் எண் தான் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் செல்போன் எண் தான் இணைக்கப்பட்டுள்ளது. என் தந்தை ரேசன் கடையில் வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். குடும்ப அட்டையை கொண்டு சென்று அதில் உள்ள உறுப்பினர்கள் கைரேசகை வைத்தால் ரேசன் பொருட்கள் வாங்கிகொள்ளலாம் என்றால் சரிதான். கடைசியாக எ.ம.சா.ஆ.1 அட்டையில் நான் ரேசன் பொருட்கள் வாங்கினேன். ரேசன் பொருட்களை பெற்றுக்கொண்டால் அந்த அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள செல்போன் எண்ணுக்கு மெசேஜ் வரும்.

(மனுதாரரிடம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அந்த செல்போனை காட்டி பார்த்தபோது குறுஞ்செய்தி எதுவும் இல்லை), நான் சொல்வது பொய் என்றும், என்னுடைய செல்போன் எண் தான் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குறுஞ்செய்தியை அழித்துவிடலாம் என்றால் சரிதான். தற்போதும் எ.ம.சா.ஆ.1 குடும்ப அட்டை செயல்பாட்டில் தான் உள்ளது. கடந்த 02.07.2026ல் நீதிமன்ற விசாரணையின் போது குடும்ப அட்டையை அப்டேட் செய்யவேண்டும் என்று சொன்னேன். அது என்ன அப்டேட் என்றால் கைரேகையை அப்டேட் செய்யசொன்னார்கள். குடும்ப அட்டை இன்று வரை ஊர்ஜிதத்தில் தான் இருந்து வருகிறது என்றும், நான் என்னை நல்லவர் என காட்டிக்கொள்ள அப்பேட் செய்யவேண்டும் என பொய்யான தகவல் நீதிமன்றத்தில் சொன்னேன் என்றால் சரியல்ல. அசல் குடும்ப அட்டை என்னிடம் தான் உள்ளது.

எங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான். இருவீட்டாரும் நன்கு விசாரித்து தான் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். திருமணத்திற்கு முன்பு என் கணவர் தனியார் கோச்சிங் சென்டரில் பணியாற்றி வந்தார் என்றால் சரியல்ல. அவர் படித்து வந்தார். என் கணவர் திருமணத்திற்கு முன்பும், பின்பும் தனியார் கோச்சிங் சென்டரில் வேலை பார்த்து வருகிறார் என்றும், நான் அதை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனுவில் என் கணவருக்கு எந்த வேலையும் இல்லை என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் கணவர் மற்றும் அவரது பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் மீது உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றததில் தனிநபர் குற்ற முறையீடு தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் அவர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மேற்படி நபர்களுக்கு எதிராக குற்ற எண்.7/24 என்றால் சரிதான். தேனி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் உள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க

எனக்கு அழைப்பானை வந்துள்ளது என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ தயாராக இருப்பதால் அந்த குற்ற வழக்கை வாபஸ் பெற உள்ளேன். என்னிடம் காட்டப்படும் **முதல் தகவல் அறிக்கை நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.2** ஆகும். **இறுதி அறிக்கை எ.ம.சா.ஆ.3** ஆகும். 25.03.2024 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அன்றைய தேதியில் உத்தமபளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஒரு எழுத்துப்பூர்வமான புகாரும், என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அதேபோல் என்னுடைய குடும்பத்தாரையும் விசாரணை செய்தார்கள்.

என்னுடன் சேர்ந்து வாழ்ந்தபோது கணவர் வேலைபார்த்தது தெரியாது. தற்போது தான் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கிலும், நான் கொடுத்த புகாரிலும் என் கணவர் எந்த வேலைக்கும் போகாமல் வீட்டில் சும்மாதான் இருக்கிறார் என்று சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் நான் இடைக்கால ஜீவனாம்சம் கோரி மனு எண்.1/25 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்றம் உத்தரவுப்படி இடைக்கால ஜீவனாம்சம் பெற்று வருகிறேன். அந்த மனுவில் என் கணவர் தனியார் கோச்சிங் நிறுவனத்தில் வேலை பார்த்து மாதம் 50,000 /- வருமானம் வருகிறது என அபிடவிட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் மது போதைக்கு அடிமையானவர் என சொல்லியுள்ளேன். குற்ற வழக்கிலும் என் கணவர் மது போதைகக்கு அடிமையானவர் என சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் என் கணவர் எந்த கெட்ட பழக்கத்திற்கும் ஆளாகமல் நல்ல தேக ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால் சரியல்ல. என் கணவர் அவருடைய பாக்கெட்டில் Coolip போதை பொருள் வைத்திருந்ததை பார்த்தேன். என் கணவர் மது அருந்தியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. என் கணவர் மது அருந்தும் பழக்கமே கிடையாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் என் கணவர் மது பழக்கம் உடையவர் அல்ல என்றும், அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதால் கோச்சிங் சென்டரில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல.

நான் B.Sc கணிதம் இளநிலை பட்டதாரி நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தேன் என்றால் 2 மாதம் தேனி நாடார் கல்லூரியில் அலுவலக உதவியாளராக வேலை பார்த்தேன். 2024ம் ஆண்டில் வேலை பார்த்தேன். நான் கல்லூரியில் வேலை பார்க்கவில்லை என்றும், இன்றுவரை சின்னமனூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த வாக்குமூலத்தில் நான் தனியார் பள்ளியில் வேலை பார்த்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது என் கணவர் வீட்டார் 25 பவுன் நகை, 40,000/- ரொக்கம், 3 லட்சம் மதிப்புள்ள சீர்பொருட்கள் கேட்டார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. போலீஸ் விசாரணையில் நகை என் கைவசம் உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. என் கணவர் தாக்கல் செய்துள்ள விவாகரத்து மனு எதிருரையில் நகை என்னிடம் உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் **என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் என் தம்பி கொடுத்த வாக்குமூலம் என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.4** ஆகும். அதில் நான் என் சீர்வரிசை பொருட்களை பெற்றுக்கொண்டு என் கணவரின் நகையை பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் கணவருடன் சண்டை போட்டு வீட்டை விட்டு செல்லும் போது என்னால் எவ்வளவு பொருட்களை எடுத்து செல்லமுடியுமோ அவ்வளவு பொருட்களை எடுத்து சென்றுவிட்டேன். மீதமுள்ள பொருட்களை கேட்கும்போது தான் என் தம்பி எ.ம.சா.ஆ.

4 வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் கணவர் அண்ணன் பெயர் சுதாகர். அவர் திருமணம் ஆகி தனியாக இருக்கிறார் என்றால் சரியல்ல. ஒன்றாக தான் உள்ளார்கள். என் நாத்தனார் மதுரையில் தனியாக கணவருடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். நான் என்னுடைய குற்ற வழக்கில் என் கணவர் மற்றும் அவர் குடும்பத்தார்கள் என்னை ஒரே வீட்டில் வைத்து வரதட்சனை கேட்டார்கள் என சொல்லியிருப்பது சரிதான்.

நான் கொடுத்த புகார் மனுவில் சீர்பொருட்களை என் கணவர் தரவில்லை என்று தான் சொல்லியுள்ளேன். புகாரில் நகைகள் எதுவும் என் கணவரிடம்இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவரின் கையொப்பம் எனக்கு தெரியும். **என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ளது என் கணவரின் கையொப்பம் தான். அன்று காவல்நிலையத்தில் பேசி முடித்த விவரத்தை தான் என் கணவர் எழுதி கையொப்பம் போட்டுள்ளார். அது எ.ம.சா.ஆ.5** ஆகும். காவல்நிலையத்தில் 03.04.2024 ல் பேசி முடித்த பின்னர் எனது பொருட்கள் என் கணவரிடம் இல்லை என்றால் சரியல்ல. என் பொருடகள் எதுவும் தற்சமயம் என் கணவரிடம் இல்லை என்றும், நான் இருக்கிறது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2021 பிப்ரவரி – 2023 ஆகஸ்ட் ஆகிய இருமுறை நான் கருவுற்றேன். நான் ஒருமுறை தான் கருவுற்றேன் என்றும், 2 முறை கருவுற்றதாக சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. என் கணவர் மது அருந்திவிட்டு என் வயிற்றில் மிதித்ததால் கரு கலைந்துவிட்டது என சொல்லியுள்ளேன். அது எந்த எந்த காலகட்டம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 13.08.2021 மதுரை வடமலையான் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, 18.08.2021 யில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நான் குழந்தை பெற்றுக்கொள்வதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். நான் மருத்துவமனையில் SLE குறைபாடு காரணமாக தான் அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. ஆனால் எனக்கு SLE குறைபாடு இருப்பது தெரியும் என்றால் நான் கருவுற்ற பின்னர் தான் தெரியும். SLE என்பது நோய் எதிர்ப்பு சக்தியை தாக்கக்கூடய மருத்துவ குறைபாடு என்றால் சரிதான். SLE என்பது ஒரு நிரந்தர மருத்துவ குறைபாடு என்றால் சரிதான். அதை மாத்திரை மருந்து மூலமாக குறைத்து கொள்ளலாம்.

திருமணத்திற்கு முன்பே 2011 லிருந்து எனக்கு SLE தாக்கம் இருப்பதாக மருத்துவர் கருத்துரை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். **என்னுடைய விடுவிப்பு சான்று எ.ம.சா.ஆ.6 ஆகும்.** எனக்கு இரத்த கொதிப்பு உள்ளது என்றால் இல்லை. எனக்கு SLE இருப்பதை மறைத்து என் கணவரை திருமணம் செய்துள்ளேன் என்றும், என்னுடைய குறைபாடை மறைப்பதற்காக அவ்வப்போது என் கணவரிடம் சண்டை போட்டு விட்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.6 மருத்துவ விடுவிப்பு சான்றிதழில் எனது 5 மாத ஆண்குழந்தை வயிற்றில் இறந்து வெளியே எடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குழந்தை இறப்பிற்கு காரணம் எனது உடலில் உள்ள சத்துக்கள் வயிற்றில் உள்ள குழந்தைக்கு செல்லாதது தான் காரணம் என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கும்போது எனக்கு SLE இருப்பதால் இல்லற வாழ்வில் ஈடுபட வேண்டாம் என மருத்துவ கருத்துரை கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் மருத்துவர் கருத்துரையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு SLE நோய் இருப்பதை நான் திருமணத்திற்கு முன்பே

சொல்லியிரந்தால் என் கணவர் திருமணத்தை தவிர்த்திருப்பார் என்றால் சரியல்ல. எனக்குள்ள நோயை திருமணத்தின்போது என் கணவருக்கு சொல்ல கடமைப்பட்டவள் என்றால் சரிதான். என் கணவருக்கு மது பழக்கமே இல்லை என்றும், நான் மது பழக்கம் இருப்பதாக நான் அவருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மருத்துவ விடுவிப்பு சான்றிதழில் குழந்தை இறக்கும்போது மிகவும் எடை குறைவாக இருந்தது என சொல்லலப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய உடல்நிலை காரணமாக தான் குழந்தை வயிற்றில் 5 மாதத்தில் இறந்து பிறந்தது என்றும், என் கணவர் மது அருந்திவிட்டு வயிற்றில் மிதித்ததால் குழந்தை இறந்துவிட்டதாக நான் மனுவில் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல.

என் கணவர் வீட்டார் எந்த வரதட்சனையும் கேட்கவில்லை என்றும், ஆனால் அவர்கள் வரதட்சனை கேட்டதாக பொய்யான குற்ற வழக்குகொடுத்து என் கணவருக்கு மன வேதனையை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் வாங்கிவிட்டேன் என்றும், ஆனால் அதை மறைத்து இன்று வரை என் கணவரிடம்இருப்பதாக கூறி அவருக்கு மனவேதனையை ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு SLE நோய் இருப்பதை மறைத்து நான் திருமணம் செய்துள்ளதால் அதனாலும் அவருக்கு மனவேதனையை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை பெற்றுக்கொள்ள தகுதியில்லாத நிலையில் நான் வேண்டுமென்றே எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக சேர்ந்து வாழ வேண்டும என மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் உடல் குறைபாட்டை மறைப்பதற்காக தான் தனிக்குடித்தனம் செல்லவேண்டும் என பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. 02.07.2024ம் தேதி என் கணவர் குடும்பத்தார் மீது பொய்யான புகார் கொடுத்து அவர்களுக்கு மனவேதனை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. காவல்நிலைய விசாரணையில் நகையை பெற்றுக்கொண்டு விட்டு அதைமறைத்து நகை என் கணவரிடம் இருப்பதாக சொல்லியிருப்பதிலிருந்தே நான் என் கணவருக்கு மனவேதனையை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி காரணங்களினால் இனிமேலும் சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலையில் என் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து மனுவை அனுமதித்து நான் சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.09 18:43:32 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்